**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**<u>அசல் வழக்கு எண். 48/2024</u>**

பெயர் : அழகுசுந்தரம் P.W.1.

த/பெ. : பக்கிரிசாமி

தேதி : 03.04.2025

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**<u>முதல் விசாரணை தொடர்ச்சி:</u>**

சாட்சி அனுமதியின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சியாக செய்யப்படுகிறார். 07.04.1985 தேதியிட்ட வாதியின் கிரய முன்னவர் பெயரில் உள்ள கிரய சாசனத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ 6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 21.08.2008 தேதியிட்ட வாதி இளங்கோவன் பெற்ற கிரய சாசனத்தின் சான்றிட்ட கணினி நகல் **வா.சா.ஆ 7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.